செ.கு. எண் 110 நாள் 22.12.09

# மேட்டூர் அணை பவள விழா நிகழ்ச்சியில் காணொலி காட்சி மூலம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை 22.12.2009

மேட்டூர் அணையின் பவள விழா நிகழ்ச்சியில் காணொளி காட்சி வாயிலாகக் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குவதிலும், பவள விழாக் கோபுரம் கட்டிட கால்கோள் இடுவதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

'உழவ ரோதை மதகோதை
உடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி'
'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி'

என்றும், காவிரியின் வெள்ளம் பாயும் மகிழ்ச்சியை சிலப்பதிகாரம் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் இலக்கியத்திலும், தமிழர்தம் வாழ்விலும் வளம் சேர்த்த காவிரியாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்துவரும் வேளைகளில் அதனைத் தடுத்து, சேமித்து வைத்து அறுவடைக் காலம் வரை தேவையான நேரங்களில் நீரைப் பயன்படுத்துவதற்கு அணை ஒன்று கட்டப்பட வேண்டும் எனும் எண்ணம் 19ஆம் நூற்றாண்டில் எழுந்தது.

அதனைத் தொடர்ந்து, நமது நாட்டிலிருந்த அன்றைய ஆங்கிலேய ஆட்சி, காவிரியில் அணை கட்டுவதற்குரிய இடத்தை ஆய்வு செய்து சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பா.வெ. மாணிக்க நாயக்கர் அவர்கள் குறிப்பிட்ட இடமான மேட்டூரைத் தேர்வு செய்தது. கர்னல் டபிள்யூ எம்.எல்லிஸ் என்ற புகழ்பெற்ற இராணுவப் பொறியாளர் 1910 ஆம் ஆண்டில் அணையை

வடிவமைத்து, உரிய மதிப்பீடுகளோடு ஆங்கிலேய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினார்.

அதே காலகட்டத்தில், அன்றைய மைசூர் சமஸ்தானமும், பொறியாளர் சர்.எம். விஸ்வேஸ்வரய்யா உதவியுடன் காவிரியில் மைசூர் அருகே கிருஷ்ணராஜசாகர் நீர்த் தேக்கத்தை அமைத்திட ஆங்கிலேய அரசிடம் அனுமதி கோரியது.

எனவே, காவிரி நீரைப் பயன்படுத்துவது தொடர்பாக அப்பொழுதே பிரச்சினைகள் எழுந்து, பல்வேறு முயற்சிகளுக்குப் பின் 1924ஆம் ஆண்டில் சென்னை மாகாண அரசுக்கும், மைசூர் அரசுக்கும் இடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. 1924ஆம் ஆண்டுதான் காவிரிப் பிரச்சினை ஆரம்பமானது. அதே 1924ஆம் ஆண்டு தான் நானும் பிறந்தேன். பிறந்தது முதல் இதுவரை அந்தப் பிரச்சினைக்காகத்தான் நான் வாதாடிக் கொண்டிருக்கிறேன். போராடிக் கொண்டிருக்கிறேன். அந்த உடன்படிக்கைக்குப் பின், காவிரியில், மேட்டூர் அணை கட்டுவதற்கு 6 கோடியே 12 இலட்சம் ரூபாயை அனுமதித்து 3.3.1925 அன்று இங்கிலாந்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து, பொறியாளர் சர். கிளமெண்ட் முல்லிங்ஸ் (Clement Mullings) என்பவரது தலைமையில் தமிழகப் பொறியாளர்கள், தொழிலாளர்கள், குறிப்பாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கல் தச்சுத் தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கில் கூடி மேட்டூர் அணையின் கட்டுமான வேலைகளை 20.7.1925இல் தொடங்கி, 1934 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறைவேற்றி முடித்தார்கள்.

ஏறத்தாழ 9 ஆண்டு காலத்தில் 120 அடி உயரத்திற்குத் தண்ணீரைத் தேக்கும்வகையில், 5 ஆயிரத்து 300 அடி நீளமும், 171 அடி அகலமும் உடையதாக கட்டி முடிக்கப்பட்ட இந்த மேட்டூர் அணையிலிருந்து 12.6.1934 அன்று முதன்முதல் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

தமிழகத்திலே உழவுத் தொழிலுக்கு அச்சாணி காவிரிதான். காவிரிக்குப் பெருமை சேர்ப்பது மேட்டூர் அணை. இந்த மேட்டூர் அணைக்கு 75 வயது முடிந்து இன்று பவள விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. 75 ஆண்டுகளுக்கு முன் இந்த அணை கட்டி முடிக்கப்பட்டபொழுது, இது ஆசியாவிலேயே பெரிய நீர்த் தேக்கம், இன்று தமிழகத்தின் தலையான நீர்த் தேக்கம்!

மேட்டூர் அணையின் பவள விழா ~~பொன்விழா~~ கொண்டாடும் இந்த நல்ல தருணத்தில் இந்த அணைக்குக் கீழே வெள்ளக் காலங்களில் கிடைக்கும் கூடுதல் நீரைத் தடுத்து நிறுத்திட கரிகால் சோழன் கட்டிய கல்லணையைத் தவிர வேறு அணை எதுவுமே இல்லாத குறையைப் போக்கிடக் கருதிய இந்த அரசு, கரூர் மாவட்டம் மாயனூர் அருகே கதவணை (barrage) அமைத்திட 5.2.2009 அன்று 189 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அதற்குரிய பணிகளை நிறைவேற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கதவணையின் மூலம் தேக்கப்படும் வெள்ள நீர் வறண்ட பகுதிகளுக்குத் திருப்பி விடப்படும்.

மேலும், காவிரி, கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் வெள்ளத்தால் சேதமடைந்த பகுதிகளைச் செப்பனிடும் திட்டத்திற்கு மத்திய அரசு 375 கோடியே 90 இலட்ச ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதில், மாநில அரசின் பங்காக 93 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயைத் தருவதற்கு தமிழக அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

காவிரிப் பாசன விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு அமையும் பொழுதெல்லாம் காவிரியாற்றிலும், கிளை ஆறுகளிலும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை தமிழக விவசாயிகள் நன்கு அறிவார்கள்.

2006இல் இந்த அரசு அமைந்தபிறகு 35 கோடியே 80 இலட்ச ரூபாயும் அனுமதிக்கப்பட்டு தூர்வாரும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுடன் கலந்து ஆலோசித்து, பொதுப் பணித்துறையும், ஊரக வளர்ச்சித் துறையும் இணைந்து, மேட்டூர் அணை

திறக்கப்படுவதற்கு முன்னதாகவே தூர்வாரும் பணிகளை நிறைவேற்றி முடித்திட வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுதவிர, தொன்மைவாய்ந்த காவிரி மற்றும் அதன் கிளை நதிகளில் அமைந்துள்ள மதகுகள், அணைகள், கதவணைகள் ஆகியவற்றைச் சீரமைத்திடவும், கரைகளைப் பலப்படுத்திடவும், வெள்ளக் காலங்களில் ஏற்படும் பாதிப்புகளைத் தடுத்திடவும் உதவும்வகையில், தமிழக அரசு 5 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பெருந்திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்துள்ளது.

இந்நிலையில், மேட்டூர் அணையின் பவளவிழா நினைவாக இதன் வலது கரையில் உள்ள குன்றின்மேல் 75 அடி உயரத்தில் ஒரு பவள விழாக் கோபுரத் தூண் அமைத்து, மேட்டூருக்குச் சுற்றுலா வரும் பயணிகள் அதன் மேல் ஏறி நின்று மேட்டூர் அணையையும், நீர்த் தேக்கத்தின் விரிந்து பரந்துள்ள மாட்சியையும், அதன் அருகில் அமைந்துள்ள இயற்கை எழில் குலுங்கும் காட்சிகளையும், மேட்டூர் நகரின் தோற்றத்தையும் கண்டு மகிழ வகை செய்யும் ஒரு திட்டத்தினை நிறைவேற்றிட இந்த அரசு 1 கோடி ரூபாயை அனுமதித்துள்ளதுடன், அத்திட்டத்திற்காக இன்று அடிக்கல் நாட்டியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக வரலாற்றில் நினைந்து மகிழ்ந்து போற்றத்தக்க நாளாக அமையும் இந்நாளில் தமிழக மக்கள் குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.

இவ்விழாவைச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துள்ள பொதுப்பணித்துறை அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள் அனைவர்க்கும் என் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்!

*****

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9